முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி

# தமிழ்நாடு முழுவதும் 103 மருத்துவ முகாம்கள்!

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்றன!

**சென்னை, ஜூன் 26 –**

**தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து துறைகளிலும் சிறப்பாக கலைஞர் நூற்றாண்டு விழாவை நடத்திட வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார். அந்த வகையில் தமிழ்நாட்டில் நேற்று முன்தினம் (24.6.2023) ஒரே நாளில் அரசு மருத்துவக் கல்லூரிகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் என்று 30 துறைகளை ஒருங்கிணைத்து பெரிய அளவில் 103 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன.**

சென்னையைப் பொறுத்தவரை 15 மண்டலங்கள் இருக்கின்றன. 15 மண்டலங்களில் ஏற்கெனவே 5 மண்டலங்களில் ஏற்கெனவே முதலமைச்ச ரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் சார்பாக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள மண்டலங்களில் 10 இடங்களிலும், மற்ற மாவட்டங்களிலும் 90 இடங்களிலும் என்று ஒரே நாளில் 103 மருத்துவ முகாம்கள் காலை தொடங்கி மாலை 5 மணி வரை இம்முகாம்கள் நடைபெற்றன.

பொதுமக்கள் இம்முகாம்களில் பயன்பெறும் வகையில் பலதுறைகள் ஒருங்கிணைத்து நடத்தப்பட்டது. மேலும் காசநோய் கண்டறிவதற்கு டிஜிட்டல் எக்ஸ்ரே பொருத்திய 28 வாகனங்களையும், தனியார் மருத்துவமனையில் உள்ள அதிநவீன வசதிகளுடன் கூடிய மருத்துவ உபகரணங்களை இந்த மருத்துவ முகாம்களில் பயன்படுத்தப்பட்டது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு, தமிழ்நாடு முழுவதும் 103 இடங்களில் கலைஞர் நூற்றாண்டு மெகா சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற்றன.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை கோடம்பாக்கம் புலியூர் மற்றும் எண்ணூர் ஆகிய இடங்களில் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நேற்று தமிழ்நாடு முழுவதும் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 100 இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. நூற்றாண்டு விழாவினை ஒட்டி 100 இடங்களில் மருத்துவ முகாம்கள் என்கின்ற அறிவிப்பு, மக்களின் வசதிக்கு ஏற்ப ஆங்காங்கே தேவை களுக்கு ஏற்பவும், நேற்று 103 இடங்களில் மருத்துவ முகாம்கள் நடைபெற்றது.

குறிப்பாக சென்னையில் 11 இடங்களிலும், தர்மபுரியில் 2 இடங்களிலும், மதுரையில் 6 இடங்களிலும், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், இராமநாதபுரம், விருதுநகர், ஆகிய மாவட்டங்களில் 3 எண்ணிக்கைகளில் இந்த முகாம்கள் நடைபெற்றன. சேலம் மாவட்டத்தில் 5 இடங்களிலும், கடலூர் மாவட்டத்தில் 4 இடங்களிலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2 இடங்களிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 6 இடங்கள் என்று இந்த மருத்துவ முகாம்கள் 103 இடங்களில் நடைபெற்றன. ஒவ்வொரு முகாம்களிலும் 2000க்கும் மேற்பட்ட பொது மக்கள் பயன்பெற்றனர்.

மேலும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தினைத் தொடர்ந்து 2009 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1ந்தேதி இளம் சிறுவர்களுக்கு கண்ணொளி காப்போம் என்கின்ற திட்டத்

தினையும் முத்தமிழறிஞர் அவர் களால் கொண்டுவரப்பட்டது. மிக விரைவில் கண்ணொளி முகாம்கள் என்கின்ற வகையில் தமிழ்நாட்டில் 100 இடங்களில் நடத்தப்படவிருக்கிறது.

சென்னையில் நடத்தப்பட்ட முகாம்களை பொறுத்தவரை சென்னை மாநகராட்சி, சென்னை ஓமந்தூரார் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையும், மெட்வே என்கின்ற தனியார் மருத்துவமனையும், மேத்தா என்கின்ற தனியார் மருத்துவமனையும் சிம்ஸ் என்கின்ற தனியார் மருத்துவமனையும் சென்னை, கோடம்பாக்கம், புலியூரில் நடைபெற்று வரும் முகாம் களில் இணைந்திருந்தனர்.

இந்த மருத்துவ முகாம்களில் எக்ஸ்ரே, கருப்பை வாய் சிகிச்சை போன்றவை பரிசோதனை செய்தனர். மேலும் சிகிச்சையினை பொறுத்தவரை பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, மகளிர் மருத்துவம், கண் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், எலும்பியல் மருத்துவம், மனநல மருத்துவ ஆலோசனை, சித்த மருத்துவம், ஆயுர்வேதம் மருத்துவம் என்று பல துறைகளின் சார்பில் மருத்துவம் பார்க்கப்பட்டன.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

## சமூக நீதிக்காக அச்சமின்றிப் போராடிய வி.பி.சிங்கிற்கு வீரவணக்கம் செலுத்துவோம்!



**இன்று ஜூன் 25,**

இந்தியாவின் சமூகநீதிக் காவலர், முன்னாள் பிரதமர் வி.பி.சிங். அவர்களின் பிறந்த நாள்.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினரை, கல்வியிலும், பொருளாதாரத்திலும் முன்னேற்ற வேண்டும் என்பதில், இறுதிவரை உறுதியாக இருந்த அந்த உண்மையான புரட்சித் தலைவருக்கு வீரவணக்கம் செலுத்துவோம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் அவர் சமூக நீதிக்காக அச்சமின்றிப் போராடினார், இடஒதுக்கீடு நமது உரிமை என்பதை வலியுறுத்த அனைவரையும் தைரியப்படுத்தினார்.

வி.பி.சிங். – நம் தமிழினத் தலைவர் கலைஞர் ஆகிய இரு பெருந் தலைவர்களின் சிந்தனையும், ஒத்திசைவுடன் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்திருந்தது. ஏனெனில் இவர்கள் அனைத்து சமூகத்திற்கும் அதிகாரம் அளிக்கும் பொதுவான இலக்கைப் பகிர்ந்து கொண்டார்கள். இவர்களது எண்ணங்கள் ஒளிமயமான மற்றும் சமத்துவமான எதிர்காலத்தை நோக்கி நம்மை வழிநடத்தும்.

நெல்லை மாவட்டத்தில்

# திட்டக்குழு உறுப்பினர்களாக கழகத்தினர் அமோக வெற்றி!

## வெற்றி பெற்றவர்கள் இரா.ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கானிடம் வாழ்த்து!

*நெல்லை, ஜூன் 26-*

*நெல்லை மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் தேர்தலில் தி.மு.க.வினர் அமோக வெற்றி பெற்றுள்ளனர்.*

*வெற்றி பெற்ற திட்டக்குழு உறுப்பினர்கள் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் ஆகியோரிடம் வாழ்த்து பெற்றனர்.*

*நெல்லை மாவட்டத்திற்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து 8 உறுப்பினர்களும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இருந்து 10 மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதற்கான தேர்தல் வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.*

*இதில் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் அருண் தவசு, சாலமோன் டேவிட், சத்தியவாணி முத்து, தனிதங்கம், மகேஷ் குமார், லிங்கசாந்தி, ஜான்ஸ் ரூபா, கிருஷ்ணவேணி ஆகிய 8 பேர் போட்டியின்றி ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டனர்.*

*மேலும் 3 நகராட்சியில் உள்ள உறுப்பினர்கள் தனி இடத்திலும், 17 பேரூராட்சிகளில் உள்ள உறுப்பினர்கள் மற்றொரு இடத்திலும் தனித்தனியாக வாக்குப்பதிவு செய்தனர்.*

*நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு மொத்தம் 394 வாக்குகளில் 378 பேர் வாக்குகளை பதிவு செய்தனர். 16 பேர் வாக்களிக்கவில்லை. வாக்குப்பதிவு 96 சதவீதமாகும். மாவட்ட ஆட்சியர் மரு.கார்த்திகேயன் வாக்கு பதிவு மையங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*நெல்லை மாநகராட்சி துணை மேயர் கே.ஆர். ராஜ், மாமன்ற உறுப்பினர்கள் சகாய ஜூலியட் மேரி, ரசூல்மைதீன், வசந்தா, ஆகியோரும், அம்பாசமுத்திரம் நகராட்சி உறுப்பினர் ஜோதி கலா, களக்காடு நகராட்சி உறுப்பினர் பூதத்தான், விக்ரம சிங்கபுரம் நகராட்சி உறுப்பினர் சுஜாதா, பணகுடி பேரூராட்சி உறுப்பினர் கோபாலகண்ணன், கோபாலசமுத்திரம் பேரூராட்சி உறுப்பினர் சுதா, திசையன்விளை பேரூராட்சி உறுப்பினர் சுபீனா, முனைக்கரைப்பட்டி பேரூராட்சி உறுப்பினர் மீனா ஆகிய 10 பேர் அமோக வெற்றி பெற்றனர். அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டவர்கள் தோல்வியடைந்தனர்.*

*வெற்றி பெற்ற மாவட்ட திட்டக்குழு தி.மு.க. உறுப்பினர்கள் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் ஆகியோரிடம் வாழ்த்து பெற்றனர்.*

*இந்நிகழ்வின் போது நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன்,*

*நெல்லை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் செல்வ சூடாமணி, உள்பட கழகத்தினர் பலர் இருந்தனர்.*

## தேனி தெற்கு மாவட்ட தி.மு.க.

# ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பங்கள் வழங்கல் !

### மாவட்டக்கழகச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிவிப்பு



தி.மு.க. இளைஞர் அணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பங்கள் வழங்க வேண்டுகோள் விடுத்துள்ளார். அதன்படி தேனி தெற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய கழகங்கள், நகர கழகங்கள், பேரூர் கழக அமைப்புகளுக்கான இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்ப படிவங்களை மாவட்டக்கழக அலுவலகத்தில் பெற்று முழுமையாக பூர்த்தி செய்து பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டி வழங்கிட வேண்டும்.

இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் கழக இளைஞர்கள் 35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். விண்ணப்பத்துடன் வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, கல்விச் சான்றிதழ் நகல் இணைத்து 30.06.2023 அன்று மாலை 5.00 மணிக்குள் மாவட்டக்கழக அலுவலகத்தில் வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**கம்பம் நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ.**
செயலாளர்
தேனி தெற்கு மாவட்ட தி.மு.க.

# இராமநாதபுரம் மண்டல அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்பு!

*இராமநாதபுரம், ஜூன் 26-*

*இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்றுமுன்தினம் (24.06.2023) வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் மூலம் மண்டல அளவிலான அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பதிவுத் துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையேற்று இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை மாவட்டங்களை உள்ளடக்கிய மண்டல அளவிலான அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர், மண்டல அலுவலர்கள், மாவட்ட பத்திரப் பதிவு அலுவலர்கள், சார் பதிவு அலுவலர்களுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் மேற்கொள்ளவேண்டிய பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டதுடன், அரசுக்கு இத்துறைகள் மூலம் பெற வேண்டிய வருவாயினை முழுமையாக பெற்று தருவதற்கான வழிகாட்டுதலை வழங்கி சிறந்த முறையில் கடமையுடனும், பொறுப்புணர்வுடனும் எவ்வித இன்னல்களுக்கும் ஆட்படாமல் செயல்பட வேண்டும் என தெரிவித்தார்.*

*தொடர்ந்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்:-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எல்லோரும் எல்லாமும் பெற்று நலமுடன் இருக்க வேண்டும் என்ற உன்னத திட்டங்களுக்கு தங்களது துறையின் மூலம் பெற்று தர வேண்டிய வருவாயினை சிறந்த முறையில் செயல்பட்டு இழப்பீட்டை விட கூடுதலாக வருவாய் பெற்று தரப்படுகின்றன. கடந்த ஆண்டு ரூ.181,000 கோடி இத்துறையின் மூலம் வருவாய் பெற்று தரப்பட்டுள்ளது.*

*பொதுவாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிடவும், மேலும் சொல்லாத பல வாக்குறுதிகளை மக்களுக்கு நிறைவேற்றிடவும் மிக முக்கியம் நிதி ஆதாரம் மட்டுமே. அந்த நிதி ஆதாரத்தை நிர்ணயிக்கப்பட்ட துறைகளின் மூலம் தான் பெற்றிட முடியும். அந்த வகையில் பதிவுத் துறை மற்றும் வணிகவரித் துறையின் மூலம் உரிய அரசு வழிகாட்டுதலை பின்பற்றி வருவாய் ஈட்டப்பட்டு நிர்ணயிக்கப் பட்ட இலக்கை விட கூடுதலாக வருவாய் பெற்று அரசுக்கு வழங்கப்படுகிறது. மேலும் கணினி மையம் மூலம் பத்திரப்பதிவு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதற்கான பயிற்சிகள் மண்டலம் தோறும் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் 3 மாவட்டங்களுக்கான மண்டல ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இதில் பதிவாளர்கள், சார்பதிவாளர்களுக்கு உரிய வழிகாட்டுதலை பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அரசுக்கு வருவாய் பெற்று தர உகந்த வழிமுறையில் செயல்பட்டு பொது மக்களிடம் எளிய அணுகு முறைகளை கையாண்டு பணி மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.*

*இந்நிகழ்ச்சியில் கூடுதல் பதிவுத்துறை தலைவர் ஜாபர் சாதிக், மண்டல அலுவலர் செந்தமிழ் செல்வன், இராமநாதபுரம் மாவட்ட பதிவு அலுவலர் ரத்தின வேல், சார் பதிவாளர் சீனிவாசன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*



கவியரசு கண்ணதாசன் அவர்களின் 97வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் அமைந்துள்ள கவியரசு கண்ணதாசன் மணி மண்டபத்தில் 24.06.2023 அன்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், அன்னாரது மார்பளவுச் சிலைக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜித், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசிரவிக்குமார், காரைக்குடி நகர்மன்றத் தலைவர் முத்துத்துரை, கவியரசு கண்ணதாசன் புதல்வி விசாலாட்சி கண்ணதாசன் உட்பட பலர் உள்ளனர்.



தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் திருவைகுண்டம் வட்டம், வல்லநாடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக கூடுதல் கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டினார். உடன் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சித்தலைவர் செந்தில் ராஜ், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், ஒன்றிய அவைத் தலைவர் வெங்கடசுப்பு, வல்லநாடு பஞ்சாயத்து தலைவர் சந்திரா முருகன், ஒன்றிய துணை செயலாளர்கள் சுரேஸ் குமார், வீரபாகு கிளை செயலாளர்கள் சின்னத்துரை, மாலையப்பண் ஒன்றிய மகளிர் அணி மாரியம்மாள், மாவட்ட பிரதிநிதிகள் கண்ணன், மாரிமுத்து மாவட்ட சிறுபான்பாமையினர் அணி துணை அமைப்பாளர் ரகுமான், மாவட்ட விவசாய அணி நேரு ஆகியோர் உடன் உள்ளனர்.